**அரசாங்க சேவை சேமலாப நிதியம் - 2013**

அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார்கூற்றுக்கள் அரசாங்க சேவை சேமலாப நிதியக் கட்டளைச் சட்டத்தின் (621 ஆம் அத்தியாயம்) 24(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. குறித்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அல்லாத நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000 – 1810) இசைவாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிசார் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காணப்படும் விடயங்களின் விளைவாக ஐந்தொகையிலும் வருமான,செலவினக் கூற்றிலும் காசுப்பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்பாடாத விடயங்களும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிசார்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். இதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிசார்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சேமலாப நிதியத்திற்கென சகல நிறுவனங்களாலும் கொடுப்பனவு செய்யப்படும் உதவு தொகை மற்றும் அரசாங்கத்தின் உதவு தொகைப் பங்களிப்பு என்பவற்றின்

கூட்டுத்தொகையான ரூபா 36,503,985,218 நடைமுறை அல்லாத பொறுப்புகளைக் காண்பிப்பதற்குப் பதிலாக உரித்துடைமையாக ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சீராக்கல் கணக்கில் நடைமுறைச் சொத்தாக ரூபா 8,825,541 இனங் காணப்படாத வரவு மீதியாக இருந்தது.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே குறிப்பிடப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கொடுக்கல் வாங்கல்களைத் திருப்பதிகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

(அ) நிதியத்தின் பொருட்டு தனிப்பட்ட கணக்குகளைக் பேணுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளமையால், ஆண்டின் இறுதியிலான கட்டாய உதவு தொகைக் கணக்கு மீதியாகிய ரூபா 14,401,779,333 பரீட்சிக்கப்பட முடியாது போயிற்று இதற்கு மேலதிகமாக, நிதியத்திற்கு கட்டாய உதவு தொகை கொடுப்பனவுகளை வழங்கிய உதவு தொகையாளர்களிடமிருந்து பெற வேண்டிய நிலுவை மீதிகளும் கணிப்பிடப்படாமலிருந்தன. மீளாய்வாண்டின் போது உதவு தொகையாக ரூபா 336,105,862 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும், மேற்படி, நிலைமை காரணமாக அக் கொடுப்பனவுகள் சரியானவையா என்பதைக் குறித்து திருப்தியடைய முடியாதிருந்தது.

(ஆ) சுய விருப்பின் பேரில் உதவு தொகைகளை வழங்குபவர்களுக்கான தனிப்பட்ட கணக்குகள் பேணப்படவில்லை. ஆகவே, ஆண்டின் இறுதியில் சுயவிருப்பின் அடிப்படையிலான உதவு தொகைக் கணக்கில் இருந்த ரூபா 22,536,299 மீதி சரியானதே என்பதை உறுதி செய்ய முடியாது போயிற்று

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்டவை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) அரசாங்க சேவை சேமலாப நிதியக் கட்டளைச் சட்டம் (621 ஆம் அதிதாரம்)** | |
| (i) பிரிவு 2(2) | ஒவ்வொரு உதவு தொகையாளர் பொருட்டும் தனிப்பட்ட கணக்குகள் பேணப்பட வேண்டுமாயினும், நிதிய ஆரம்பத்திலிருந்து தனிப்பட்ட கணக்குகள் பேணப்படாதிருந்தன. |
| (ii) பிரிவு 25 | ஒவ்வொரு இறுதியாண்டு முடிவிலும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தால் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கத்தவர் கணக்கு மீதிகள் உதவு தொகையாளர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டுமாயினும், அதற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (iii) பிரிவு 7(1) | நூற்றுக்கு 8 சதவீத உதவு தொகையும் நூற்றுக்கு 12 சதவீதமான அரசாங்க உதவு தொகையும் திறைசேரிப் பிரதிப் பணிப்பாளரிடமிருந்து பெறப்பட வேண்டுமாயினும், ஓய்வூதியப் பணிப்பாளர் |

நாயகத்தின் 2010 மே 25 ஆந் திகதிய 4/2010 ஆம் இலக்க சுற்றறிக்கை அறிவுறுத்துரைகளுக்கமைய கட்டாய உதவு தொகை மற்றும் அரசாங்க உதவு தொகை ஆகிய இரண்டையும் குறித்த நிறுவனங்களிடமிருந்தே பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்**

(i) நிதிப் பிரமாணம் 396(ஈ) — மீளாய்வாண்டில் வழங்கப்பட்டு, ஆறு மாதங்களுக்கு மேலாக கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் ரூபா 43,353 க்கான காசோலைகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 486 — 2012 ஒக்டோபர் 03 முதல் 2013 செப்டெம்பர் 03 வரையான காலப்பகுதியின்போது பெறப்பட்டு, கொடுப்பனவு மறுக்கப்பட்டிருந்த ரூபா 150,565 க்கான உதவு தொகைக்குரிய 10 காசோலைகளைக் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 2,757,264,050 மிகையாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,560,334,257 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 196,929,793 அதிகரிப்பு காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

(அ) ஒவ்வொரு மாதத்திலும் நிதியத்தில் செலவு வைக்கப்படும் தொகை சம்பந்தமான அறிவிப்பை அடுத்து வரும் மாதத்தின் 15 க்கு முன்னர் நிதியத்தின் செயலாளருக்குக் குறித்த நிறுவனம் அனுப்பி வைத்தல் வேண்டுமாயினும், மீளாய்வாண்டின்போது ஒவ்வொரு மாதத்திற்குமான இவ்வறிவித்தலை சில நிறுவனங்கள் மாத்திரமே அனுப்பியிருந்தன. எனினும், அவ்வறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு நடவடிக்கைகளை முகாமைத்துவம் மேற்கொள்ளவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் நிதியமானது அங்கத்தவர்களுக்கு உரித்தாக்கிய வட்டி வீதம் குறைவாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதம் 0.29 சதவீதத்தால் குறைவடைந்துமிருந்தது.

(இ) திறைசேரி செயற்பாட்டு சுற்றறிக்கையிள் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த முதலீடுகளான நிலையான வைப்புகள், திறைசேரிப் பிணைமுறி, திறைசேரி உண்டியல் என்பவற்றினது எதிர்பார்க்கப்பட்ட நலன்களை மதிப்பாய்வு செய்தல்

மூலம் நிதியம் தனக்குச் சாதகமான முதலீட்டுத் தீர்மானத்தை மேற்கொள்வதில் கவனஞ் செலுத்தாதிருந்தது.

**4.2 நிதியம் இழப்பிற்குள்ளான வட்டி வருமானம்**

திறைசேரிச் செயலாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மிகையூதியத்தை நிதியம் பெறாமையால் அத்தொகையை முதலீடு செய்வதன் மூலம் சம்பாதித்திருக்கக் கூடிய வட்டி வருமானம் இழப்பிற்கு உள்ளாகியிருந்தது. மீளாய்வாண்டிலும் முன்னைய 7 ஆண்டுகளிலும் 11.95 சதவீத சராசரி வட்டி விகிதத்திற்கமைய இழப்பிற்குள்ளான வட்டி வருமானம் ரூபா 1,658,680,493 ஆகும்.

**4.3 அங்கத்தவர்களுக்கு நலன்களை வழங்குதல்**

நிதியத்தின் அங்கத்தவர்கள் நலன்களைப் பெறுவதற்காகச் சமர்ப்பித்த விண்ணப்பங்களில் 2538 விண்ணப்பங்களுக்கு மீளாய்வாண்டு இறுதி வரை கொடுப்பனவுகள் செய்யப்படவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தினது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கழிவுகளுக்கான பதிவேடு
(இ) அங்கத்தவர்களுக்கான தனிப்பட்ட கணக்குகள்
(ஈ) முதலீடு
(உ) உதவு தொகை